# FORM-3
# MINUTES OF THE COUNCIL MEETINGS
## (See rule 5 and Serial Number 3 of Appendix - I)
## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2012 பிப்ரவரி திங்கள் 29.02.2012–ம் நாள் புதன்கிழமை காலை 10.30 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

முன்னிலை:
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்.

**பொருள் எண். 1**

இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான எழுதுபொருட்கள், படிவங்கள் மற்றும் பதிவேடுகள் வாஙகுவதற்காக இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.22, நாள்24.11.2011–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதில் ரூ.62,000/–க்கு சேவைமைய ரெசீதுகள் அச்சடிக்கப்பட்டன. மீதமுள்ள தொகை ரூ.1,38,000/–க்கு இந்நகராட்சிக்கு தேவையான எழுது பொருட்கள், படிவஙகள், பதிவேடுகள் வாஙகுவதற்காக அவசர அவசியம் கருதி அஙகீகரிக்கப்பட்ட கூட்டுறவு நிறுவனஙகளிடமிருந்து விலைப்புள்ளிகள் பெறப்பட்டன. அதன் விவரம் பின்வருமாறு.

1) மதுரை மாவட்ட கூட்டுறவு சஙகம், மதுரை.
2) திருநெல்வேலி மாவட்ட கூட்டுறவு சஙகம், திருநெல்வேலி.
3) தூத்துக்குடி மாவட்ட கூட்டுறவு சஙகம், கோவில்பட்டி.

மேற்காணும் விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள தூத்துக்கு மாவட்ட கூட்டுறவு நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று வினியோக உத்தரவு வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.சி1/936/2011)

**தீர்மானம் எண்:103. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 2**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ரூ.2415 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ள பாதாள சாக்கடை திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயார் செய்வதற்காக மேற்படி திட்ட மதிப்பீட்டு தொகையில் 1 % ரூ.24.15 இலட்சம் Investigation Charges செலுத்துவதற்கு, செயற்பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், திருநெல்வேலி அவர்களின் கடிதம் எண். F.UGSS to Municipality (al) JDO2 நாள் 09.01.2012–ல் தெரிவிக்கப்பட்டுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு:** மன்றம் முடிவு செய்யலாம்.

(ந.க.எண்.அ2/167/2006)

**தீர்மானம் எண்:104. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 3**

இந்நகராட்சிக்குட்பட்ட காமராஜர் பேருந்து நிலையத்தில், பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2011–12–ன்கீழ் ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் உயர் கோபுர மின்விளக்கு அமைக்கும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினமணி நாளிதழில் பிரசுரம் செய்த வகையில் ரூ.4,536/– ஐ வழஙக கேட்டு பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி தொகையினை வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு:** மன்றம் அனுமதி வழஙகலாம்.

(ந.க.எண்.இ1/17435/2011)

**தீர்மானம் எண்:105. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 4**

இந்நகராட்சிக்குட்பட்ட சிங்கன்காவு சாலையில் ரூ.16.00 இலட்சம் மதிப்பீட்டில் பிளாஸ்டிக் கழிவுகளை பயன்படுத்தி பிளாஸ்டிக் சாலை அமைக்கும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை 26.01.2012–ம் தேதிய மாலை மலர் நாளிதழில் பிரசுரம் செய்த வகையில் ரூ.1,122/– ஐ செலுத்த கேட்டு பட்டியல் பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை சம்மந்தப்பட்ட அலுவலகத்திற்கு செலுத்துவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.இ1/6816/2011)

**தீர்மானம் எண்:106. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 5**

இந்நகராட்சியின் சார்பாக 63–வது குடியரசு தினவிழா நிகழ்ச்சி ஏற்பாடு செய்த வகையில் தேசியக்கொடி, இனிப்புகள், பெயின்ட் அடித்தல், கொடிக்கம்ப மேடைக்கு வெள்ளை அடித்தல், பூமாலை வாஙகியது. புகைப்படம் எடுத்தல் மற்றும் தேநீர் வழஙகியது உட்பட ஆன செலவு ரூ. 3,633/– வழஙகிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு:** மன்றம் அனுமதி வழஙகலாம்.

(ந.க.எண்.எச்1/557/2012 )

**தீர்மானம் எண்:107. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 6**

இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகத் தெருவில், பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2010–11 நிதியில் ரூ.1.75 இலட்சம் மதிப்பீட்டில் படிப்பகம் கட்டும் பணிக்கு 02.09.2010–ல் திரு.சி.பிரின்ஸ், ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழஙகப்பட்டது. மேற்படி பணியானது பணி உத்தரவு வழஙகிய நாளிலிருந்து 2 மாதத்திற்குள் முடிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் பணியானது மிகவும் மந்தமாக நடைபெற்ற காரணத்தால், பலமுறை நேரிலும், கடிதம் மூலமாகவும், தொலைபேசி மூலமாகவும் பணியினை விரைந்து முடிக்க அறிவுறுத்தப்பட்டது. இறுதியாக 26.12.2011–ல் பணியினை விரைந்து முடிக்கவும், தவறும் பட்சத்தில் ஒப்பந்த விதிகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்து இறுதி அறிவிப்பும் வழஙகப்பட்டது. எனினும் இதுநாள் வரையிலும் படிப்பகம் கட்டும் பணி முடிக்கப்படவில்லை. இதனால் பொதுமக்கள் மத்தியிலும் உயர் அதிகாரிகள் தரப்பிலும், நகராட்சிக்கு அவப்பெயர் ஏற்படும் சூழ்நிலை உருவாகியுள்ளது. எனவே திரு.சி.பிரின்ஸ், ஒப்பந்ததாரரை, ஒப்பந்த விதிகளின்படி கருப்பு பட்டியலில் சேர்க்க நடவடிக்கை மேற்கொள்வதற்கு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு:** 1) மன்றம் முடிவு செய்யலாம்.
2) இதனால் ஏற்படும் சகல இழப்புகளுக்கும் சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரரையே பொறுப்பாக்கலாம்.

(ந.க.எண்.இ1/4117/2010 )

**தீர்மானம் எண்:108. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 7**

குளச்சல் நகராட்சி ஆண்டு கணக்கு 2009–2010–ம் ஆண்டு கணக்கு வருவாய் மற்றும் மூலதன நிதி மற்றும் குடிநீர் வடிகால் நிதி கணக்குகள் தணிக்கை துறைக்கு அனுப்பி வைக்க ஏதுவாக கணக்குகள் முடித்த வகையில் திரு.வி. ஸ்ரீனிவாசன், கன்சல்டன்ட்–க்கு ரூ.20,000/– வழஙக கேட்டுள்ளார். மேற்படி தொகை வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு:** மன்றம் அனுமதி வழஙகலாம்.

(ந.க.எண்.பி1/5628/2011 )

**தீர்மானம் எண்:109. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 8**

இந்நகராட்சியில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2011–12–ன்கீழ் ரூ.5.00 லட்சம் மதிப்பீட்டில் கீழ்காணும் பணிகளை மேற்கொள்வதற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகர்கோவில் அவர்களின் நடவடிக்கைகள் செ.மு.எண்.ஆ3/4791/2011 – நாள் 19.01.2012–ன்படி நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1 | குளச்சல் நகராட்சி 19–வது வார்டு நெசவாளர் தெருவில் பொது வினியோகக் கடை கட்டுதல். | ரூ. 2,50,000/– |
| 2 | குளச்சல் நகராட்சி 7–வது வார்டு குழந்தை ஏசு நகரில் பொது வினியோகக் கடை கட்டுதல். | ரூ. 2,50,000/– |

மேற்காணும் பணிகளுக்கு 21.02.2012–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண். இ1/7849/2011 )

**தீர்மானம் எண்:110. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 9**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவு பணிக்கு தேவையான கீழ்க்கண்ட தளவாடச் சாதனஙகள் உத்தேச செலவு ரூ.90,000/–க்கு வாஙகுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

தேவையான தளவாடச் சாதனஙகள்

(1) மண்வெட்டி – 15 எண்ணம்
(2) முள்மண்வெட்டி – 10 "
(3) நீளமண்வெட்டி – 10 "
(4) பிக்காசி – 4 "
(5) சட்டி சிறியது (பிளாஸ்டிக்) – 20 "
(6) தகடு (குப்பை அள்ள) – 60 "
(7) வெட்டுக்கத்தி – 4 "
(8) கோடாரி – 1 "
(9) குப்பை அள்ள பெரியகூடை (பிளாஸ்டிக்) – 30 "
(10) பெரியமாறு – 40 "
(11) கைமாறு – 25 "

**அ.குறிப்பு:** பொது சுகாதார நலன் கருதி அவசர அவசியமாக துப்புரவுப் பணிக்கு தேவைப்படும் மேற்படி தளவாட சாதனஙகள் வாஙகுவதற்கு உத்தேச செலவு ரூ.90,000/– (ரூபாய் தொண்ணுாறு ஆயிரம் மட்டும் ) மன்றம் அனுமதி வழஙகலாம்.

(ந.க.எண்.எச்1/1388/09 )

**தீர்மானம் எண்:111. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 10**

இந்நகராட்சிக்குட்பட்ட வெள்ளிப்பிள்ளையார் கோவிலின்கீழ் KSSSகாலனி அருகில் உள்ள சம்ப்–ல் இருந்து மாதாகாலனி மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு செல்லும் 4" G.I. பிரதான

குழாயில் பழைய கிணறு அருகில் உடைவு ஏற்பட்டுள்ளது. இதனால் அப்பகுதி மக்களுக்கு சீராக தண்ணீர் கொடுக்க முடியவில்லை. எனவே 4'' G.I. Pipe –ஐ மாற்றி 4'' PVC Pipe பொருத்தவும், மேலும் துறைமுகத்தெருவுக்கு செல்லும் 2''G.I.பிரதான குழாய் KSSSகாலனி சம்ப் அருகில் உடைந்துள்ளதால் அதனை மாற்றி 2'' PVC Pipe பொருத்தி சரி செய்வதற்கும் மதிப்பீடு ரூ. 22,000/– தயாரிக்கப்பட்டு போர்க்கால அடிப்படையில் குடிநீர் பணி அவசர அவசியம் கருதியும், நகராட்சிகள் சட்டம் பிரிவு 15–ன்கீழ் பணி மேற்கொள்வதற்கு அனுமதி வழஙகியதை மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**அ.குறிப்பு:** குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி, பிரிவு 15–ன்கீழ் பணி மேற்கொள்ள மதிப்பீடு தொகை ரூ. 22,000/–க்கு ஆணையர் அனுமதி வழஙகியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.இ1/1203/12 )

**தீர்மானம் எண்:112. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 11**

இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெருவில் உள்ள இரண்டு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு வெள்ளிப்பிள்ளையார் கோவில் அருகில் உள்ள இரண்டு ஆழ்துளை கிணறுகளில் இருந்து தண்ணீர் ஏற்றப்பட்டு குடிநீர் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது குடிநீர் குழாய் இணைப்பு பெருகிக் கொண்டு வருவதால் குடிநீர் எல்லா பகுதிகளுக்கும் சீராக விநியோகம் செய்யப்பட முடியாத நிலை நிலவி வருகிறது. ஆகவே மாதாகாலனி நீர்த்தேக்க தொட்டிக்கு செல்லும் 4''பிரதான குழாயை துறைமுகத்தெரு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு செல்லும் 4''பிரதான குழாயுடன் இணைப்பதற்கு மதிப்பீடு ரூ.23,000/– தயாரிக்கப்பட்டு போர்க்கால அடிப்படையில் குடிநீர் பணி அவசர அவசியம் கருதியும், நகராட்சிகள் சட்டம் பிரிவு 15–ன்கீழ் பணி மேற்கொள்வதற்கு அனுமதி வழஙகியதை மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**அ.குறிப்பு:** குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி, பிரிவு 15–ன்கீழ் பணி மேற்கொள்ள மதிப்பீடு தொகை ரூ. 23,000/–க்கு ஆணையர் அனுமதி வழஙகியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.இ1/1204/12 )

**தீர்மானம் எண்:113. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 12**

இந்நகராட்சிக்குட்பட்ட KSSSகாலனியில் உள்ள ஆழ்துளை கிணற்றிலிருந்து சுனாமி சிங்காரவேலன் காலனியில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு நீர் ஏற்றும் போது தண்ணீர் அழுத்தமாக ஏறவில்லை. எனவே மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு செல்லும் பிரதான குழாய் முழுவதும் சிமெண்ட் தளத்தின் அடியில் உள்ளதாலும், பெரும்பாலான வீடுகளின் மதில் சுவர் பிரதான குழாயின் மேற்பகுதியில் கட்டப்பட்டுள்ளதாலும், புதியதாக 63 mm HDPE line KSSSகாலனி ஆழ்துளை கிணற்றிலிருந்து சுனாமி சிங்காரவேலன் காலனி மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வரை மேற்படி குழாய் அமைப்பதற்கு மதிப்பீடு ரூ. 70,000/– தயாரிக்கப்பட்டு போர்க்கால அடிப்படையில் குடிநீர் பணி அவசர அவசியம் கருதியும், நகராட்சிகள் சட்டம் பிரிவு 15–ன்கீழ் பணி மேற்கொள்வதற்கு அனுமதி வழஙகியதை மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**அ.குறிப்பு:** குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி, பிரிவு 15–ன்கீழ் பணி மேற்கொள்ள மதிப்பீடு தொகை ரூ. 70,000/–க்கு ஆணையர் அனுமதி வழஙகியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.இ1/1204/12 )

**தீர்மானம் எண்:114. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 13**

இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்காணும் குத்தகை இனஙகளை அனுபவித்துக் கொள்ளும் உரிமஙகளுக்கான குத்தகை காலம் 31.03.2012 வுடன் முடிவடைவதால் 2012–2013 முதல் 2014–2015 முடிய 3 ஆண்டுகளுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும், ஏல அறிக்கை மற்றும் செய்தி விளம்பரம் மேற்கொள்ளவும் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஏல விபரம் | முன்வைப்புத் தொகை ரூ. | குத்தகை உரிம காலம் |
|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்கு சொந்தமான டாக்டர் அம்பேத்கார் மற்றும் தினசரிச் சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | 1,00,000 | 01.04.2012 முதல் 31.03.2015 முடிய. |
| 2 | இந்நகராட்சி பகுதியிலிருந்து வெளியே கொண்டு செல்லும் மீன்களுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | 25,000 | 01.04.2012 முதல் 31.03.2015 முடிய. |
| 3 | இந்நகராட்சிக்கு சொந்தமான பெருந்தலைவர் காமராஜர் பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | 75,000 | 01.04.2012 முதல் 31.03.2015 முடிய. |
| 4 | இந்நகராட்சி பேருந்து நிலையத்தில் உள்ள பெருந்தலைவர் காமராஜர் பேருந்து நிலைய கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | 15,000 | 01.04.2012 முதல் 31.03.2015 முடிய. |
| 5 | இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட அண்ணா சிலை சமீபம் உள்ள நகராட்சி கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | 1,000 | 01.04.2012 முதல் 31.03.2015 முடிய. |
| 6 | இந்நகராட்சி பெருந்தலைவர் காமராஜர் பேருந்து நிலையத்தின் அருகிலுள்ள மினி லாரி வாகனம் (டெம்போ) நிறுத்தும் இடத்தின் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 5,000 | 01.04.2012 முதல் 31.03.2015 முடிய. |
| 7 | இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட பொட்டல் சாலை ஓர தென்னைமரம், நகராட்சி அலுவலக வளாகத்திலுள்ள தென்னை மரம் மேல் ஆதாயம் (மகசூல்) அனுபவிக்கும் உரிமம். | 1,000 | 01.04.2012 முதல் 31.03.2015 முடிய. |

**அ.குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.அ1/11062/2012 )

**தீர்மானம் எண்:115. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு வ.எண்.1 டாக்டர்.அம்பேத்கார் மற்றும் தினசரி சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் நீங்கலாக 2 முதல் 7 வரை வரிசை எண், ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 14**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.47923/2011/இ3 நாள் 01.02.2012–ன்படி, நகர்புற உள்கட்டமைப்பு திட்டம் (IUDM) 2011–12 திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள பணிகளுக்கு ரூ.240.00 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. அவற்றில் சாலைப்பணிகள் மேற்கொள்ள ரூ.100.00 இலட்சமும், வடிகால் ஓடை அமைக்கும் பணிக்கு ரூ.78.00 இலட்சமும், தெருவிளக்கு அமைக்கும் பணிக்கு ரூ.12.00 இலட்சமும் மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணிகளுக்கு ரூ.50.00 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சிப் பகுதியில் மேற்கொள்ளப்படவுள்ள பணிகள் குறித்த விபரம் பின்வருமாறு :

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|
| **I** | **சாலைகள்** | |
| 1 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட மார்க்கெட் சாலையில் பேவர் பிளாக் மற்றும் தார்தளம் அமைத்தல் | **21.60** |

| | | |
|---|---|---|
| 2 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பந்தவிளையில் பேவர் பிளாக் தளம் அமைத்தல் | 19.50 |
| 3 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட காமராஜர் சாலையில் தார்தளம் அமைத்தல் | 16.65 |
| 4 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பர்னட்டிவிளை முதல் பாலத்தன்கரை வரை தார்தளம் அமைத்தல். | 7.20 |
| 5 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட விவேகானந்தர் சாலை மற்றும் சன்னதித்தெரு முதல் வெள்ளிப்பிள்ளையார் கோவில் சாலை வரை தார்தளம் அமைத்தல். | 9.50 |
| 6 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட நெசவாளர் காலனியில் தார்தளம் அமைத்தல். | 7.00 |
| 7 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட கே.எஸ்.எஸ்.எஸ்.காலனி முதல் கொட்டில்பாடு சாலையில் தார்தளம் அமைத்தல். | 3.90 |
| 8 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட நரிக்கல் முதல் சிங்கன்காவு சாலையில் தார்தளம் அமைத்தல். | 11.65 |
| 9 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட ஆசாரிமார் இசக்கியம்மன் வடக்கு தெருவில் சிமென்ட் தளம் அமைத்தல். | 3.00 |
| | **மொத்தம்** | **100.00** |
| **II** | **வடிகால் ஓடை** | |
| 1 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட ஜேம்ஸ் மருத்துவமனை முதல் திக்கணங்கோடு சாலை வரை நடைபாதையுடன் கூடிய மழைநீர் வடிகால் ஓடை அமைத்தல். | 37.75 |
| 2 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட அண்ணாசிலை முதல் பெரியபள்ளி வரை இருபக்கமும் நடைபாதையுடன் கூடிய மழைநீர் வடிகால் ஓடை அமைத்தல். | 33.00 |
| 3 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட நரிக்கல் சந்திப்பு முதல் ஒற்றைக்கண்பாலம் வரை வடிகால் ஓடையின் மேல் மூடு சிலாப் அமைத்தல். | 7.25 |
| | **மொத்தம்** | **78.00** |
| **III** | **மின்விளக்குகள் அமைத்தல்** | |
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட முக்கியமான பகுதிகளில் 36W, 85W மின்சேமிப்பு விளக்குகள் ( CFL Lamp ) மற்றும் அதற்குரிய உபகரணங்கள் அமைத்தல். | 12.00 |
| | **மொத்தம்** | **12.00** |
| **IV** | **திடக்கழிவு மேலாண்மை திட்டம்** | |
| 1 | கண்காணிப்பு வாகனம் – 1 எண்ணம்<br>குப்பைகள் அள்ளும் வாகனம் – 2 எண்ணங்கள் | 18.00 |
| 2 | மண்புழு உரம் தயாரிக்கும் கூடம் அமைத்தல். | 10.00 |
| 3 | குப்பைகள் மட்க வைத்து உரமாக்கும் கூடம் அமைத்தல். | 10.00 |
| 4 | பாதுகாப்பு அறை, அலுவலக அறை, இருப்பு அறை (Store Room) மற்றும் உர மூட்டை தைக்கும் அறை மற்றும் கழிவறை கட்டுதல். | 12.00 |
| | **மொத்தம்** | **50.00** |

**<u>அ.குறிப்பு</u>** : மேற்படி திட்டத்தின்கீழ் தேர்வு செய்யப்பட்ட பணிகளுக்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண். 93 நாள் 24.01.2012–ன்படி ஏற்கெனவே ஒப்புதல் அளித்துள்ளது. தற்போது நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ள தொகைக்கு முன்னுரிமை அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டுள்ள மேற்காணும் பணிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண்.இ1/7057/2011)

**தீர்மானம் எண்:116. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டது. ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**பொருள் எண். 15**

இந்நகராட்சிக்குட்பட்ட சிங்கன்காவு சாலையில் ரூ.16.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ள பிளாஸ்டிக் கழிவுகளை சேர்த்து பிளாஸ்டிக் சாலை அமைக்கும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை 26.01.2012–ம் தேதிய தினமலர் பதிப்பில் பிரசுரம் செய்த வகையில் ரூ.1,800/–ஐ செலுத்த கேட்டு பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி தொகையினை வழஙகுவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு:** மன்றம் அனுமதி வழஙகலாம். (ந.க.எண்.இ1/6816/2011)

**தீர்மானம் எண்:117. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 16**

இந்நகராட்சிக்குட்பட்ட சிஙகன்காவு சாலையில் ரூ.16.00 இலட்சம் மதிப்பீட்டில் பிளாஸ்டிக் சாலை அமைக்கும் பணிக்கு 09.02.2012–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.P. தஙகமணி, ஒப்பந்ததாரர் | 2.72% மதிப்பீட்டை விட கூடுதல். (ரூ. 15,91,920/–) |
| 2. | திரு.K. கிருஷ்ணதாஸ், ஒப்பந்ததாரர் | 0.02% மதிப்பீட்டை விட குறைவு. (ரூ. 15,49,350/– ) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.02% குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, திரு.K. கிருஷ்ணதாஸ், ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழஙகுவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு:** மன்றம் அனுமதி வழஙகலாம்.

(ந.க.எண்.இ1/6816/2011 )

**தீர்மானம் எண்:118. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 17**

இந்நகராட்சிக்குட்பட்ட சிஙகன்காவு மெயின்ரோடு முதல் களிமார் பாலம் வரை மழைநீர் வடிகால் ஓடையில் ஏற்பட்டுள்ள அடைப்புக்களை JCB மூலம் தூர்வாரி சரி செய்வதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.2,62,000/– க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.57, நாள் 30.12.2011–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 24.01.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | M/s.M.H.எர்த் ஒர்க்ஸ், குளச்சல். | 2.54% மதிப்பீட்டை விட குறைவு. (ரு.2,48,784/–) |
| 2. | M/s.A1. எர்த் ஒர்க்ஸ், குளச்சல். | 6.61% மதிப்பீட்டைவிட கூடுதல். (ரூ. 2,72,144/–) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 2.54% குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த M/s.M.H.எர்த் ஒர்க்ஸ், குளச்சல் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி ஏற்று பணி உத்தரவு வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு:** மன்றம் அனுமதி வழஙகலாம். (ந.க.எண்.இ1/7629/2011 )

**தீர்மானம் எண்:119. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.18**

இந்நகராட்சிக்குட்பட்ட 24 வார்டுகளிலும் உள்ள வரிவிதிப்பாளர்களுக்கு சொத்துவரி, குடிநீர் கட்டணம், தொழில்வரி, குத்தகை, கடை வாடகை மற்றும் இதர லைசன்ஸ் கட்டணஙகள் செலுத்தக் கோரி 01.03.2012 முதல் 31.03.2012–க்குள் விளம்பரப்படுத்த உத்தேச செலவுத் தொகை ரூ.30,000/– வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். அ1/4826/2007)

**தீர்மானம் எண்:120. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 19**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பர்னட்டிவிளையில் திரு.எஸ்.பிரைட் என்பவருக்கு சொந்தமான க.எண்.2–107/3 கட்டிடம் அமைந்துள்ள பகுதியானது இந்நகராட்சியின் சொத்துவரி நிர்ணய மண்டல பிரிவுகளில் மண்டலம் C–ல் அமைந்துள்ளது. ஆனால் 2009–10 முதல் அரையாண்டில் மேற்படி கட்டிடத்திற்கு சொத்துவரி விதிக்கப்பட்ட போது மண்டலம் A –ல் தவறாக கொண்டு வரப்பட்டு ரூ. 1835/– அரையாண்டு சொத்துவரியாக நிர்ணயம் செய்யப்பட்டது. ஆனால் மண்டலம் C–ன் மதிப்பின்படி அரையாண்டு வரித்தொகையாக ரூ.671/– மட்டுமே நிர்ணயம் செய்யப்பட்டிருக்க வேண்டும். எனவே மேற்படி கட்டிடத்தின் சொத்துவரி நிர்ணயத்தினை மண்டலம் A –யிலிருந்து மண்டலம் C–க்கு மாற்றி சொத்துவரி நிர்ணயத்தை 2009–10 இரண்டாம் அரையாண்டிலிருந்து திருத்தம் செய்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு:** மன்றம் அனுமதி வழஙகலாம்.

(ந.க.எண்.அ1/1263/2011)

**தீர்மானம் எண்:121. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 20**

இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவு மினிலாரி TN-74-Z-2339–ன் பிரேக் கிளட்ச் பழுதடைந்து விட்டதால் அதனை மாற்றி ரூ.15,000/– உத்தேச செலவினத்தில் புதிய பிரேக் கிளட்ச் பொருத்த வேண்டியிருந்தது. பொது சுகாதார அவசர அவசியம் கருதி நகராட்சி சட்டம் பிரிவு 15–ன்கீழ் மேற்காணும் பணி மேற்கொள்ளப்பட்டு, அதற்கான தொகை ரூ.14,950/– வழஙகப்பட்டது. எனவே மேற்படி பணி மேற்கொள்ளப்பட்டதற்கு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு:** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.எச்1/4008/2010)

**தீர்மானம் எண்:122. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 21**

இந்நகராட்சி 2008–09–ம் ஆண்டிற்கான தணிக்கை புத்தகம் (பொது நிதி மற்றும் குடிநீர்) கணினி மூலம் தட்டச்சு செய்து ஒளிநகல் பிரதி எடுத்து புத்தகஙகள் செய்து கொடுத்த வகையில் அருந்ததி அவர்கள் ரூ.9,430/– வழஙக கேட்டு பட்டியல் சமர்ப்பித்துள்ளார். மேற்படி தொகை வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு:** மன்றம் அனுமதி வழஙகலாம்.

(ந.க.எண்.பி1/5628/2011)

**தீர்மானம் எண்:123. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 22**

இந்நகராட்சிக்குட்பட்ட சாம்பசிவபுரம் காலனியில் அமைந்துள்ள கதவு எண்.9/12–க்கான குடிநீர் இணைப்பு 2004 சுனாமியால் பாதிக்கப்பட்டு பழுதடைந்துள்ளதால் அதன் குடிநீர் இணைப்பை தற்காலிகமாக துண்டிப்பு செய்ய மனுதாரர் 22.02.2005 அன்று மனு கொடுக்கப்பட்டுள்ளது. இக்குடிநீர் இணைப்பின் கேட்பு இன்று வரையிலும் கணினியிலும், கேட்பு பதிவேட்டிலும் எழுப்பப்பட்டு வருகிறது. ஆகவே குடிநிர் இணைப்பு துண்டிப்பு செய்த காலத்திலிருந்து தற்போது வரையிலும் உள்ள கேட்பு தொகை ரூ. 4,038/– ஐ கணினியிலும், கேட்பு பதிவேட்டிலும் நீக்கம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். அ1/7344/2011)

**தீர்மானம் எண்:124. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 23**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு தேவையான பிளீச்சிங பவுடர் 1000 கிலோ, பினாயில் 200 லிட்டர் மற்றும் நீர்த்த சுண்ணாம்பு 2000 கிலோ ஆகிய பொருட்களை ரூ.50,000/– செலவினத்திற்குள் வாங்கி கொள்வதற்கு நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.14 நாள் 24.11.2011–ல் அனுமதி வழஙகியுள்ளது. மேற்கண்ட பொருட்களை வினியோகம் செய்வதற்காக 30.12.2011–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. பெறப்பட்ட 3 ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | பிளீச்சிங பவுடர் கிலோ – 1–க்கு ரூ. | பினாயில் லிட்டர்–1–க்கு ரூ. | நீர்த்த சுண்ணாம்பு கிலோ – 1–க்கு ரூ. |
|---|---|---|---|---|
| 1 | ஜெய பிரபா டிரேடர்ஸ், தக்கலை. | 27.50 | 45.00 | 6.70 |
| 2 | குமரி ஸ்டோர்ஸ், நாகர்கோவில் | 29.00 | 47.00 | 7.00 |
| 3 | ஸ்ரீ பாலாஜி ஏஜென்சீஸ், நாகர்கோவில் | 31.00 | 49.00 | 7.50 |

மேற்காணும் மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஜெய பிரபா டிரேடர்ஸ், தக்கலை என்வருக்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் 30.12.2011 அன்று முன்அனுமதி மூலம் ஒப்புதல் வழஙகியதையும், பொது சுகாதார அவசர அவசியம் கருதி மேற்படி நிறுவனத்திற்கு மேற்கண்ட பொருட்களை வினியோகம் செய்திட 03.02.2012–ல் வினியோக உத்தரவு வழஙகியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு: 1)** பொது சுகாதார அவசர அவசியம் கருதி 30.12.2011–ல் நகர்மன்ற தலைவர் அவர்கள் முன் அனுமதிவழஙகியதை மன்றம் அனுமதிக்கலாம்.

2) 03.02.2012–ல் ஜெய பிரபா டிரேடர்ஸ், தக்கலை நிறுவனத்திற்கு வினியோக உத்தரவு வழஙகியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். எச்1.1388/2009 )

**தீர்மானம் எண்:125. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. மன்றம் அனுமதியளிக்கப்பட்டது.**

**பொருள் எண். 24**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட சாஸ்தாஙகரை கள்ளியடைப்பு தெருவிலுள்ள கதவு எண்.1/64.எ. யில் உள்ள கட்டிடம் 2005–2006 முதல் வணிக பயன்பாட்டில் இல்லை. அதனை குடியிருப்பு பயன்பாடாக மாற்ற மனு செய்துள்ளார். மேற்படி கட்டிடம் ஆணையர் அவர்கள் நேராய்வு செய்யப்பட்டதில் தற்போது வணிக பயன்பாட்டிற்கான உபயோகம் ஏதுமில்லை. காலியாகவே உள்ளது. ஆகவே பயன்பாடு இல்லாமல் இருக்கும் மேற்படி கதவு எண் கொண்ட கட்டிடத்தின் வணிக உபயோகத்தினை மாற்றி 2011–2012 II முதல் குடியிருப்பு உபயோகத்தில் மாற்ற மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். அ1/7632/2011 )

**தீர்மானம் எண்:126. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 25**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 21, 23 மற்றும் 24 ஆகிய வார்டுகளில் கீழ்கண்ட விபரப்படியான கட்டிடங்கள் இடிக்கப்பட்டு புதிய வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. ஆனால் கட்டிடங்களின் சொத்துவரி கேட்பு நீக்கப்படாமல் நிலுவையாக இருந்து வருகிறது. எனவே 2011–2012 II முதல் சொத்துவரி ரத்து செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | கதவு எண். | வரிவிதிப்பு எண். | வரிவிதிப்பாளர் பெயர் | நிலுவை ஆண்டு | தொகை | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 1 | 22–99/1 | 6858 | திரு.கே. ராஜன் | – | – | இக்கட்டிடம் இடிக்கப்பட்டு புதிய கட்டிட வரிவிதிப்பு எண்.6862 ரூ. 1639/– படி செலுத்தப்பட்டு வருகிறது. |
| 2 | 29–50.எ | 7152 | திரு.பரமேஸ்வரன் | 2007–08-II முதல் 2011–12 -II வரை | 1611 | கட்டிடம் இடிக்கப்பட்டு தரைமட்டமாக்கப்பட்டுள்ளது புதிய வரிவிதிப்பு எண்.7228 ரூ.453/– படி செலுத்தப்பட்டு வருகிறது. |
| 3 | 30–29.எ | 6455 | திருமதி.நபிஷா பீவி | 2010–11 -I முதல் 2011–12 -II வரை | 284 | கட்டிடம் இடிக்கப்பட்டு தரைமட்டமாக்கப்பட்டுள்ளது |
| 4 | 23–101 | 5579 | திருமதி.மேரி மார்க்கிரேட்டாள் | – | – | கட்டிடம் இடிக்கப்பட்டு தரைமட்டமாக்கப்பட்டுள்ளது |
| 5 | 2–200/2 | 8735 | திரு.ஜஸ்டின் சுனில் தாஸ் | 2008–09 -II முதல் 2011–12 -II வரை | 1736 | இக்கட்டிடம் இடிக்கப்பட்டு புதிய கட்டிடம் கட்டப்பட்டு வரிவிதிப்பு எண். 8753 ரூ.978/–படி செலுத்தப்பட்டு வருகிறது. |

**அ.குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். அ1/7135/20112)

**தீர்மானம் எண்:127. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.26**

இந்நகராட்சிக்குட்பட்ட இந்திரா காலனி பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் சேகரிக்கப்படும் குப்பைகள் நிறைந்துள்ளதால், மேற்கொண்டு குப்பைகளை கொட்டுவதற்கு முடியாமல் உள்ளதாலும், அவசர அவசியம் கருதி J.C.B. இயந்திரம் மூலமாக குப்பைகளை அப்புறப்படுத்துவதற்கு ரூ.2,25,000/– செலவினத்திற்குள் பணிமேற்கொள்ள அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் 03.02.2012–ல் முன்அனுமதி வழஙகியுள்ளார்கள். அதன் அடிப்படையில் 22.02.2012 அன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டன. அதன் விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு. ஆரோக்கியம் 18/4, துறைமுகத்தெரு, குளச்சல். | ரூ. 3,30,480/– 46.88% மதிப்பீட்டை விட கூடுதல். |
| 2. | திரு.M. அன்வர் அலி 20/66, செட்டிவிளை, குளச்சல். | (–) ரூ. 2,23,560/– 0.64% மதிப்பீட்டை விட குறைவு. |

மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.64% குறைவாக கொடுத்துள்ள திரு.M. அன்வர் அலி, ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு:** 1.மேற்படி பணிக்கு மதிப்பீட்டுத் தொகை ரூ.2,25,000/–க்கு நகர்மன்ற தலைவர் அவர்கள் 03.02.2012 அவசர அவசியம் கருதி முன்அனுமதி வழஙகியதை மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தில் குறைவாக கொடுத்துள்ள திரு.M.அன்வர் அலி, ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழஙக மன்றம் அனுமதி வழஙகலாம்.

(ந.க.எண்.342/2012/எச்1)

**தீர்மானம் எண்:128. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. திரு.M.அன்வர் அலி ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**பொருள் எண். 27**

இந்நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவு, திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தினசரி சேகரமாகும் குப்பைகள் மற்றும் கழிவுகளை கொண்டு உரமாக்கும் திட்டத்தினை செயல்படுத்துவதற்க்காக கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையின்படி ரீத்தாபுரம் பேரூராட்சிக்குட்பட்ட உப்பளம் பகுதியில் சுமார் 4.50 ஹெக்டேர் நிலம் ஒதுக்கி தரப்பட்டது. அதில் சுமார் 1.3 ஏக்கரில் கட்டுமான பணிகள் மேற்கொள்வதற்க்காக பாதை அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டபோது ரீத்தாபுரம் பேரூராட்சி உபதலைவர் மற்றும் பொதுமக்கள் சேர்ந்து மேற்கண்ட இடத்தில் நடைபெறும் பணிக்கு ஆட்சேபனை தெரிவித்து வாக்குவாதம் செய்து தகராறு ஏற்பட்டு குளச்சல் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்து , தற்பொழுது வழக்கு நிலுவையில் உள்ளது.

இந்நிலையில் தினசரி சுமார் 5.00 மெட்ரிக் டன் சேகரமாகும் குப்பைகள் மற்றும் கழிவுகளை நகராட்சிக்குட்பட்ட இந்திராகாலனி அருகில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் கொட்டப்பட்டு வருகிறது. அந்த இடம் போதுமானதாக இல்லாததாலும், இடம் குறைவான அளவாக இருப்பதாலும் விரைவாக நிரம்பி விடுவதால் மேற்கொண்டு தினசரி சேகரமாகும் குப்பைகள் மற்றும் கழிவுகளை மேற்கொண்டு கொட்ட இயலாத நிலை உள்ளது. இதனால் சுற்றுப்பகுதியில் சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டு அஙகு உள்ள பொதுமக்களின் பொதுசுகாதாரம் பாதிக்கப்பட்டு, மிகவும் சிரமத்திற்கு உள்ளாவதோடு, பொதுமக்கள் போராட்டம் மற்றும் சாலை மறியல் போன்ற சம்பவஙகளில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் அவசர அவசியம் கருதியும் பொதுமக்களின் பொது சுகாதாரம் கருதியும் நிரம்பியுள்ள குப்பைகள் மற்றும் கழிவுகளை ஒப்பந்தபுள்ளி அடிப்படையில் அப்புறப்படுத்தப்பட்டு வருகிறது. நகராட்சியில் போதுமான நிதிஆதாரமும் இல்லாததால் நிதிஇழப்பு ஏற்படும் சூழ்நிலை உள்ளது. ஆதலால் ஏற்கெனவே திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் கழிவுகள் மற்றும் குப்பைகளைக் கொண்டு உரமாக்கும் திட்டத்திற்கு தேர்வு செய்யப்பட்ட இடத்திற்கு கிழக்கு பக்கம், கருஙகல் ரோடு லியோன்நகர் பாலத்தை ஒட்டியவாறு உள்ள இடம் ஒதுக்கி கொடுத்தால் வாகனப் போக்குவரத்திற்கு வசதியாக இருக்கும் என்பதாலும், திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் கழிவுகள் மற்றும் குப்பைகளைக் கொண்டு உரமாக்கும் திட்டம் விரைந்து செயல்படுத்த ஏதுவாக இருக்கும் என்ற விவரம் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு :** 1) மன்றம் முடிவு செய்து ஏற்கலாம்.

2) மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பலாம்.

( ந.க.எண்.எச்1/524/2012.)

**தீர்மானம் எண்:129. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பி வைத்திட தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.28**

குளச்சல் நகராட்சியின் 15–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.எல்.சிலுவைமேரி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.

(1) பாம்பூரி வாய்க்கால் அருகில் இருக்கும் சத்துணவுக் கூடத்தின் பின்புறம் இருக்கும் இடத்தில் மதிற்சுவர் எழுப்பியும், சீர் செய்தும், மின்விசிறி அமைக்கவும் மன்றம் தீர்மானிக்கலாம்.

(2) சைமன்காலனி பாலத்திலிருந்து பாம்பூரி வாய்க்கால் செல்லும் நடைபாதையில் இருக்கும் புறம்போக்கு நிலத்தில் இருக்கும் தென்னை மரத்தை அகற்றி தார்ச்சாலை அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

(3) பாம்பூரி வாய்க்காலில் பெண்கள் குளிக்கும் இடத்தில் படித்துறை இடிந்த நிலையில் இருப்பதால் அதை மாற்றி வேறு இடத்தில் புதிய படித்துறை அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

(4) பாம்பூரி வாய்க்காலில் கழிவுநீர் ஓடையிலிருந்து வரும் கழிவுநீர் கலப்பதால் சுகாதார சீர்கேடு ஏற்படுகிறது. ஆகவே கழிவுநீர் ஓடையை ஏ.வி.எம். சானலில் கொண்டு சேர்க்கும் வகையில் உரிய நடவடிக்கை எடுக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண்:130. ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்

# FORM-3
# MINUTES OF THE COUNCIL MEETINGS
## (See rule 5 and Serial Number 3 of Appendix - I)
## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் 2012 பிப்ரவரி திங்கள் 29.02.2012–ம் நாள் புதன்கிழமை காலை 11.30 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

முன்னிலை:
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்.

**பொருள் எண். 1**
**குளச்சல் நகராட்சி நகர்மன்றத் தலைவர் அவர்கள் கொண்டுவரும் மாவட்ட நிர்வாகத்தையும், தமிழக அரசையும் கேட்டு கவன ஈர்ப்பு சிறப்பு தீர்மானம்.**

குளச்சல் நகரத்தின் தொடக்க எல்கையில் செயல்பட்டு வருவது, வி.கே.பி. தொடக்கப்பள்ளி மற்றும்.மேல்நிலைப்பள்ளி. நூற்றாண்டுகளுக்கும் மேலாக செயல்பட்டு வரும் சிறப்பான பள்ளி. இப்பள்ளியில் 43–க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள், பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர். 2300–க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் இப்பள்ளியில் பயின்று வருகின்றனர். எண்ணிலடஙகா மருத்துவர்களையும், பொறியாளர்களையும், அரசு அதிகாரிகளையும், பல்வேறு துறை வல்லுனர்களையும் உருவாக்கிய பெருமை இப்பள்ளிக்கு உண்டு. தற்போது அரசு மதுபானக் கடை ஒன்று இப்பள்ளியின் அருகாமையில், அதாவது கல்லுக்கூட்டம் பஞ்சாயத்தின் எல்கை முடியும் பகுதியில் அமைய உள்ளது. அவ்வாறு அரசு மதுபானக்கடை அமையும் பட்சத்தில் மாணவ, மாணவியரின் கல்வி பாதிக்கப்படுவது மட்டுமின்றி, அநாகரிகமான செயல்கள் நடந்திடும் வாய்ப்பு உருவாக்கப்படும். எனவே பல பகுதிகளிலிருந்தும் வந்து படிக்கும் மாணவ, மாணவியரின் நலனை கருத்தில் கொண்டு, அப்பகுதியில் மதுபானக்கடை அமைப்பதற்கு அனுமதி அளிக்கக் கூடாது என மாவட்ட நிர்வாகத்தையும், தமிழக அரசையும் கேட்டு மன்றம் தீர்மானிக்கலாம்.

<u>அ.குறிப்பு</u> : மன்றம் தீர்மானித்து பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்:131. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்.2**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் அரசுக்கும், நகரராட்சிக்கும் எதிராக தொடுக்கப்படும் வழக்குகளை நடத்தவும், நகராட்சி சார்பாக, வாத பிரதிவாதஙகளை மேற்கொள்ளவும், சட்ட ஆலோசனைகள் வழஙகுவதற்கும், கன்னியாகுமரி மாவட்டம் கல்குளம் தாலுகா, குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பகுதியில், விவேகனந்தர் சாலையில் வசிக்கும் வழக்குரைஞர் திரு. கு. முருகன், த/பெ குமரேசன் என்பவரை நியமனம் செய்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.குறிப்பு</u> : மன்றம் முடிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்:132. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.3**

தமிழக அரசின் 02.12.2008–ம் தேதிய (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறை) அரசாணை எண்.238–ன்படி இந்நகராட்சியானது இரண்டாம் நிலையிலிருந்து முதல் நிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டுள்ளது.

அவ்வாறு முதல்நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டாலும், அதற்கேற்றவாறு பொறியியல் பிரிவு, குடிநீர் வழங்கும் பிரிவு (ம) பொதுப்பிரிவில் மிகவும் குறைந்த பணியாளர்களே பணிபுரிந்து வருகிறார்கள்.

எனவே இந்நகராட்சி நிர்வாக நலனை முற்றிலும் கருத்தில் கொண்டு கீழ்க்காணும் புதிய பணியிடங்களை தோற்றுவிக்க வேண்டியுள்ளது.

| | | |
|---|---|---|
| **பொறியியல் பிரிவு** | | |
| 1 | உதவி பொறியாளர் | 1 |
| 2 | பணி ஆய்வர் | 2 |
| 3 | குழாய் ஆய்வர் | 2 |
| 4 | மீட்டர் ரீடர் | 2 |
| 5 | மின்பணியாளர் நிலை–2 | 2 |
| 6 | குழாய் பொருத்துநர் நிலை– 2 | 6 |
| 7 | குழாய் திறப்பாளர் | 18 |
| 8 | மின்பணியாளர் நிலை–1 | 1 |
| 9 | மின்கம்பியாளர் | 1 |
| 10 | மின்கம்பி உதவியாளர் | 2 |
| **பொதுப்பிரிவு** | | |
| 1 | இளநிலை உதவியாளர் (வகுப்பு – VII ) | 4 |
| 2 | காசாளர் | 1 |
| 3 | வருவாய் ஆய்வாளர் | 1 |
| 4 | உதவியாளர் | 1 |
| 5 | பதிவுறை எழுத்தர் | 1 |
| 6 | கணக்கர் | 1 |
| 7 | அலுவலக உதவியாளர் | 1 |
| 8 | ஆவண எழுத்தர் | 1 |
| 9 | அலுவலக இரவு காவலர் | 1 |
| 10 | வரிவசூல் உதவியாளர் | 6 |
| 11 | பிரிவு எழுத்தர் | 1 |
| 12 | கணனி இயக்குநர் மற்றும் எழுத்தர் | 3 |
| 13 | சஙகிலியாளர் | 1 |
| | மொத்தம் | 60 |

**அ.குறிப்பு** : 1) மன்றம் அனுமதி வழஙகலாம்.

2) மேற்கண்ட 60 அலுவலக பணியிடஙகளுக்கு தற்காலிகமாக தகுதி வாய்ந்த ஆடவர் மற்றும் மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் மூலமாக அலுவலகப்பணி மேற்கொள்வது குறித்து சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதி பெற்று தற்காலிகமாக பணி செய்ய அனுமதி வழஙகலாம்.

(ந.க.எண். 10698/2008/சி1)

**தீர்மானம் எண்:133. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 4**

குளச்சல் நகராட்சியின் பரப்பளவு 5.18 சதுர கிலோ மீட்டர், 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 23155 ஆகும். 24 வார்டுகளை கொண்ட இந்நகரில் 5306 குடியிருப்புகள் உள்ளது. அரசு நிர்ணயித்த 50 பணியிடஙகளில் தற்பொழுது 46 துப்புரவு பணியாளர்கள் உள்ளனர். அதில் குடிநீர் பிரிவிற்கு 10, அலுவலகப் பணிக்கு 3, வருவாய் பிரிவிற்கு 4, ஓட்டுநர் பணிக்கு 2, தெருவிளக்கு பராமரிப்பதற்கு 2 மற்றும் இரவு காவலர் பணிக்கு 1 என மாற்றுப் பணிக்கு 22 துப்புரவு பணியாளர்கள் போக மீதமுள்ள 24 துப்புரவு பணியாளர்களை கொண்டு கொசு மருந்து அடிக்கும் பணி, பொது சுகாதாரப் பிரிவிலுள்ள மினி டிப்பர் லாறி மூலம் குப்பைகள் அகற்றும் பணி மற்றும் 24 வார்டுகளிலும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் வீடுவீடாக குப்பைகள் சேகரிக்கும் பணி, கழிவுநீர் ஓடை சுத்தம் செய்தல், தெரு சுத்தம் செய்தல் ஆகிய பணிகள்

மேற்கொள்ளப்பட்டு வருகிறது. காலியாகவுள்ள 4 துப்புரவு பணியாளர்களின் காலிப் பணியிடங்களில் 1 துப்புரவு பணியாளரின் மாத ஊதியம் ரூ. 9833/– வீதம் கணக்கிடப்பட்டு, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியரின் செயல்முறைகள் ந.க.எண்.அ1/11092/2010 நாள் 25.06.2010 –ன்படி 2010–11–ம் ஆண்டிற்கு வயது வந்த ஆண் மற்றும் பெண் தினக்கூலிப் பணியாளர்களுக்கு நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 200/– வீதம் 6 தினக்கூலிப் பணியாளர்களை ஓர் ஆண்டிற்கு நகர்மன்ற தீர்மானம் எண்.1801 நாள் 30.08.2011 –ன்படி ஒப்பந்த அடிப்படையில் தனியார் துப்புரவு பணியாளர்கள் நியமிக்கப்பட்டு துப்புரவுப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்பொழுது துப்புரவுப் பணியில் ஈடுபட்டுள்ள 24 + 6 = 30 துப்புரவு பணியாளர்களைக் கொண்டு இந்நகரில் உள்ள பொதுமக்களுக்கு திருப்திப்படும் வகையில் முழுமையான துப்புரவுப் பணிகளை மேற்கொள்ள இயலாத நிலை உள்ளது.

அரசு ஆணை (நிலை) எண்.101 நாள் 30.04.1997 –ல் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகோலின்படி கீழ்க்காணும் விவரப்படி துப்புரவு பணியாளர்களின் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட வேண்டும்.

| வ.எண். | வேலை வகைப்பாடு விவரம் | தோற்றுவிக்கப்பட வேண்டிய துப்புரவு பணியாளர்களின் பணியிடங்கள் |
|---|---|---|
| 1 | 250 குடியிருப்புகளுக்கு 3 துப்புரவு பணியாளர்கள் கொண்ட குழு என்ற அடிப்படையில் இந்நகராட்சியில் உள்ள 5306 குடியிருப்புகளுக்கு 63 துப்புரவு பணியாளர்கள் தேவை. ஆனால் இந்நகராட்சியில் 50 துப்புரவு பணியிடங்களில் 46 துப்புரவு பணியாளர்கள் உள்ளனர். கூடுதலாக 13 துப்புரவு பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட வேண்டும். | 13 |
| 2 | குப்பைகளை அகற்றுவதற்கு சிறிய லாரி ஒன்றுக்கு 3 துப்புரவு பணியாளர்கள் வீதம் இந்நகராட்சியில் 3 சிறிய லாரிக்கு 9 துப்புரவு பணியாளர்கள் தோற்றுவிக்கப்பட வேண்டும். | 9 |
| 3 | பேருந்து நிலையத்திலும் மற்றும் அங்காடியில் உள்ள கட்டண கழிப்பிடத்தை பராமரிக்க. 1 துப்புரவு பணியாளர் பணியிடம் தோற்றுவிக்கப்பட வேண்டும். | 1 |
| 4 | பேருந்து நிலையத்தை சுத்தம் செய்ய (C மற்றும் B பேருந்து நிலையத்திற்கு) இரண்டு துப்புரவு பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட வேண்டும். | 2 |
| 5 | 10 இலட்சம் வரை வருமானம் வரக்கூடிய நகராட்சி அங்காடியையும் மற்றும் கழிப்பறையை சுத்தம் செய்யவும் 2 துப்புரவு பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட வேண்டும். | 2 |
| | ஆக மொத்தம் தோற்றுவிக்கப்பட வேண்டிய பணியிடங்கள். | 27 |

ஆகையால் மேற்காணும் 27 துப்புரவு பணியாளர் பணியிடங்கள் தோற்றுவிக்க உரிய அனுமதி கோரி சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு அனுப்ப நகர்மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

**அ.குறிப்பு** : 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) மேற்கண்ட 27 துப்புரவு பணியிடங்களுக்கு தற்காலிகமாக தகுதி வாய்ந்த ஆடவர் மற்றும் மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் மூலமாக துப்புரவுப்பணி மேற்கொள்வது குறித்து சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதி பெற்று தற்காலிகமாக பணி செய்ய அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 2622/2009/எச்1)

**தீர்மானம் எண்:134. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 5**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் பணிபுரிந்து வரும் மினி லாறி ஓட்டுநர் இரண்டு பணியிடங்களுக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்.மூ.மு.எண்.8269/2/010/ஜே3 நாள் 10.01.2011–ன்படி வழங்கப்பட்ட அனுமதி 30.09.2011–ல் முடிவடைந்துள்ளதால் மேலும் 01.10.2011 முதல் 30.09.2012 முடிய ஓராண்டு நீட்டித்து வைத்துக் கொள்ளவும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணைகள் சமர்ப்பிக்கவும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : சுனாமியால் பாதிக்கப்பட்ட குளச்சல் நகருக்கு நகரின் சுகாதார நலனை கருத்தில் கொண்டு பொது சுகாதார பணிகளுக்கு இப்பணியிடம் அவசியம் தேவைப்படுவதால் 01.10.2011 முதல் மேலும் ஓராண்டிற்கு நீட்டித்து வைத்துக் கொள்ள ஒப்புதல் பெறலாம்.

(ந.க.எண். 1203/94/சி1)

**தீர்மானம் எண்:135. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 6**

இந்நகராட்சியில் தெருவிளக்கு பராமரிப்பு பணிகளுக்கு பயன்படுத்திய பழைய மின்சாதனங்களை ஏலம் விடுவதற்கு ரூ.41,200/–க்கு உத்தேச மதிப்பீடு தயாரிக்கப்பட்டு 21.02.2012–ல் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 11 நபர்கள் முன்வைப்புத் தொகை செலுத்தி ஏலத்தில் கலந்து கொண்டார்கள். அவர்களில் திரு.எ.ஷாஜஹான், குளச்சல் என்பவர் அதிகபட்ச ஏலத் தொகையாக ரூ.71,000/– க்கு ஏலம் கேட்டுள்ளார். மேற்படி தகவல் மன்றத்தின் பார்வைக்கும், பழைய பொருட்களை அப்புறப்படுத்துவதற்கு திரு.எ.ஷாஜஹான், குளச்சல் என்பவருக்கு உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/5044/2011 )

**தீர்மானம் எண்:136. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 7**

இந்நகராட்சியில் குடிநீர் பராமரிப்பு பணிகளுக்கு பயன்படுத்திய மோட்டார்கள், வால்வுகள் மற்றும் பழைய பொருட்களை ஏலம் விடுவதற்கு ரூ. 1,67,000/–க்கு உத்தேச மதிப்பீடு தயாரிக்கப்பட்டு 21.02.2012–ல் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 11 நபர்கள் வைப்புத் தொகை செலுத்தி ஏலத்தில் கலந்து கொண்டார்கள். அவர்களில் திரு.எ.முகம்மது நாசர், நெய்யூர் என்பவர் அதிகபட்ச ஏலத் தொகையாக ரூ. 1,70,500/–க்கு ஏலம் கேட்டுள்ளார். மேற்படி தகவல் மன்றத்தின் பார்வைக்கும், பழைய பொருட்களை அப்புறப்படுத்துவதற்கு திரு.எ. முகம்மது நாசர், நெய்யூர் என்பவருக்கு உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/8058/2011

**தீர்மானம் எண்:137. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 8**

இந்நகராட்சிக்குட்பட்ட காமராஜர் பேருந்து நிலையத்தில், இயக்குதலும், பேணுதலும், இடை நிரப்புதல் நிதி 2010–11 திட்டத்தின்கீழ் ரூ.29.00 இலட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் தளம் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பணியானது ரூ. 27,25,006/– ல் முடிக்கப்பட்டதால், இந்நகராட்சி பொது நிதியிலிருந்து பேருந்து நிறுத்துமிடம், பேருந்து நிலைய வடிகால் மற்றும் நடைபாதை அமைப்பதற்கான மதிப்பீடு ரூ. 7,00,000/–ல் மீதமுள்ள திட்ட நிதி ரூ. 1,74,994/– ஐ ஈடு செய்து கொள்ளவும் (ரூ.5,25,006/–க்கும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/5366/2010 )

**தீர்மானம் எண்:138. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 9**

இந்நகராட்சியில் குடிநீர் பராமரிப்பு பணிகளுக்கு பயன்படுத்திய மோட்டார்கள், வால்வுகள் மற்றும் பழைய பொருட்களுக்கான ஏல அறிவிப்பினை 15.02.2012—ம் தேதிய தினமலர் நாளிதழில் பிரசுரம் செய்த வகையில் ரூ. 1,200/— ஐ செலுத்த கேட்டு பட்டியல் பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை செலுத்துவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழஙகலாம்.

(ந.க.எண்.இ1/8058/2011 )

**தீர்மானம் எண்:139. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 10**

இந்நகராட்சியில் தெருவிளக்கு பராமரிப்பு பணிகளுக்காக பயன்படுத்திய பழைய மின் சாதனஙகளுக்கான ஏல அறிவிப்பினை 15.02.2012—ம் தேதிய தினமலர் நாளிதழில் பிரசுரம் செய்த வகையில் ரூ.1,200/— ஐ செலுத்த கேட்டு பட்டியல் பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை செலுத்துவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழஙகலாம்.

(ந.க.எண்.இ1/5044/2011 )

**தீர்மானம் எண்:140. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 11**

இந்நகராட்சிக்குட்பட்ட குப்பைகள் கொட்டும் இடமான இந்திரா காலனியில் அடிக்கடி தீ பற்றுவதால் அவசரகால உபயோகத்திற்காக 2'' ஜி.ஐ.பைப் மூலம் பகிர்மான குழாய் அமைக்க மறுமதிப்பீடு ரூ.13,000/— தயாரிக்கப்பட்டு பணியின் அவசர அவசியம் கருதி, ஆணையர் அனுமதி பெற்று துறை மூலம் செய்து முடிக்கப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

அ.குறிப்பு: 1.மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி துறை மூலம் பணி செய்ததை மன்றம் அனுமதிக்கலாம்.
2.மேற்படி பணியின் மதிப்பீட்டு தொகை ரூ.13,000/—க்கு நகர்மன்ற தீர்மான எண்.92 நாள் 24.01.2012—ன்படி மன்றம் ஒப்புதல் வழஙகி உள்ளது.

(ந.க.எண்.8045/2011/இ1)

**தீர்மானம் எண்:141. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 12**

இந்நகராட்சி பொதுப்பிரிவு அலுவலகத்தின் ஒரு பகுதியை Record Room ஆக மாற்றுவதற்கான திருத்திய மதிப்பீட்டு தொகை ரூ.70,000/— க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.1714 நாள் 30.08.2011—ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழஙகியுள்ளது. அதன் அடிப்படையில் 16.02.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | திரு.R.ஜான்,<br>ஒப்பந்தத்தாரர் | ரூ.66,702/—<br>(மதிப்பீட்டை விட 0.01% குறைவு ) |
| 2. | திரு.P. தஙகமணி<br>ஒப்பந்தத்தாரர் | ரூ.66,805/—<br>(மதிப்பீட்டை விட 0.15% கூடுதல் ) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.01% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.R.ஜான் ஒப்பந்தத்தாரரின், ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழஙகலாம்.

(ந.க.எண். இ1/5611/2009 )

**தீர்மானம் எண்:142. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 13**

இந்நகராட்சிக்குட்பட்ட 17–வது வார்டு அழகனார்கோட்டவிளையில் குடிநீர் வினியோக குழாய் 2'' பிவிசி–ஐ மாற்றி 3'' பிவிசி. அமைப்பதற்கான மதிப்பீட்டு கட்டணம் ரூ.24,000/– க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.59 நாள் 30.12.2011–மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 16.02.2012–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.

| | | |
|---|---|---|
| 1. | திரு.C. சந்திரசேகர்<br>ஒப்பந்தத்தாரர் | ரூ.23,372.60<br>(மதிப்பீட்டை விட 0.02% குறைவு) |
| 2. | திரு.P. தஙகமணி<br>ஒப்பந்தத்தாரர் | ரூ. 24,423/–<br>(மதிப்பீட்டை விட 4.47% அதிகம்) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.02% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.C.சந்திரசேகர், ஒப்பந்தத்தாரரின், ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>** : மன்றம் அனுமதி வழஙகலாம்.

(ந.க.எண். இ1/8044/2011)

**தீர்மானம் எண்:143. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 14**

இந்நகராட்சிக்குட்பட்ட 2–வது வார்டு தும்பக்காட்டுவிளையில் பயனற்ற நிலையில் உள்ள கிணற்றை ரூ.10,000/– மதிப்பீட்டில் மூடுவதற்கான பணிக்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.91 நாள் 24.01.2012–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழஙகியுள்ளது. அதன் அடிப்படையில் 16.02.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | M/s.M.H.எர்த் ஒர்க்ஸ்,<br>குளச்சல். | ரூ.6,120/–<br>(மதிப்பீட்டை விட 1.02% குறைவு) |
| 2. | M/s.எ.ஒன் எர்த் ஒர்க்ஸ்,<br>குளச்சல். | ரூ.6,255/–<br>(மதிப்பீட்டை விட 1.16% அதிகம்) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 1.02% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.M.H.எர்த் ஒர்க்ஸ், குளச்சல் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>** : மன்றம் அனுமதி வழஙகலாம்.

(ந.க.எண். இ1/234/2012)

**தீர்மானம் எண்:144. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 15**

இந்நகராட்சிக்குட்பட்ட குழந்தை ஏசு நகர் பகுதியில் அமைந்துள்ள சாலைகளில் கட்டர்கள் அமைப்பதற்கும், ஆசாத்நகர் பகுதியில் மழைநீர் வடிகால் சுவர்களை சிறிது இடம் மாற்றி அமைப்பதற்கும் ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.10,000/–க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.90 நாள் 24.01.2012–ன் மூலம் ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 16.02.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.

| | | |
|---|---|---|
| 1. | திரு.S. ஜான்றோஸ்,<br>ஒப்பந்தத்தாரர் | ரூ.9,640.50/–<br>(மதிப்பீட்டை விட 3.36% அதிகம்) |

| | | |
|---|---|---|
| 2. | திரு.P. தஙகமணி<br>ஒப்பந்தத்தாரர் | ரூ. 9,321/–<br>(மதிப்பீட்டை விட 0.06% குறைவு) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.06% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.P.தஙகமணி, ஒப்பந்தத்தாரரின், ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>** : மன்றம் அனுமதி வழஙகலாம்.

(ந.க.எண். இ1/54/2011)

**தீர்மானம் எண்:145. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 16**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16–ல் நிரவுவிளை பகுதியில் சிமெண்ட் தளம் அமைக்கும் பணிக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.60,000/–க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.26 நாள் 24.11.2011–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 16.02.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.

| | | |
|---|---|---|
| 1. | திரு.P. தஙகமணி<br>ஒப்பந்தத்தாரர் | ரூ.57,054/–<br>(மதிப்பீட்டை விட 0.02% குறைவு) |
| 2. | திரு.S. ஜான்றோஸ்,<br>ஒப்பந்தத்தாரர் | ரூ. 57,124/–<br>(மதிப்பீட்டை விட 0.10% அதிகம்) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.02% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.P. தஙகமணி, ஒப்பந்தத்தாரரின், ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>** : மன்றம் அனுமதி வழஙகலாம்.

(ந.க.எண். இ1/6965/2011)

**தீர்மானம் எண்:146. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 17**

இந்நகராட்சிக்குட்பட்ட சைமன்காலனி பாலம் முதல் துறைமுகத்தெரு எல்கை கல் வரை, கொட்டில்பாடு அந்தோணியார் காலனி, J.B.காலனி, பள்ளி சந்திப்பு முதல் துறைமுகம் பாலம் வரை, சைமன்காலனி பாலம் முதல் மாதா காலனி வரை (பாம்பூரி வாய்க்கால் வரை) சுனாமி காலனி (Near Community Hall) மற்றும் துறைமுகம் பிளாட் அருகில் ஆகிய இடஙகளில் வளர்ந்துள்ள புல் புதர்களை JCB மூலம் அகற்றுவதற்கு ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.38,800/–க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.77 நாள் 24.01.2012–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 16.02.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.

| | | |
|---|---|---|
| 1. | M/s.M.H.எர்த் ஒர்க்ஸ்,<br>குளச்சல். | ரூ.38,160/–<br>(மதிப்பீட்டை விட 0.63% குறைவு) |
| 2. | M/s.எ.ஒன் எர்த் ஒர்க்ஸ்,<br>குளச்சல். | ரூ. 38,880/–<br>(மதிப்பீட்டை விட 1.25% கூடுதல்) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.63% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.M.H.எர்த் ஒர்க்ஸ், குளச்சல் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>** : மன்றம் அனுமதி வழஙகலாம்.

(ந.க.எண். எச்1/750/2011)

**தீர்மானம் எண்:147. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 18**

இந்நகராட்சிக்குட்பட்ட பாலத்தன்கரையில் Check dam–ல் நிரம்பியுள்ள மண்ணை அப்புறப்படுத்தவும், ஓடையை தூர் வாரி செப்பனிடவும் ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.36,000/–க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.95, நாள் 24.01.2012–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 16.02.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.

| | | |
|---|---|---|
| 1. | M/s.M.H.எர்த் ஒர்க்ஸ், குளச்சல். | ரூ.32,850/– (மதிப்பீட்டை விட 3.86% குறைவு ) |
| 2. | M/s.எ.ஒன் எர்த் ஒர்க்ஸ், குளச்சல். | ரூ. 35,100/– (மதிப்பீட்டை விட 2.73% கூடுதல் ) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 3.86% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.M.H.எர்த் ஒர்க்ஸ், குளச்சல் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>** : மன்றம் அனுமதி வழஙகலாம்.

(ந.க.எண். இ1/343/2011 )

**தீர்மானம் எண்:148. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.19**

இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கான 1400 VA Invertor பழுதடைந்துள்ளதை சரி செய்வதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.30,000/–க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.88, நாள் 24.01.2012–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 15.02.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.

| | | |
|---|---|---|
| 1. | M/s.Nanotech Computers, Karungal. | ரூ.30,000/– (மதிப்பீட்டு விகிதம்) |
| 2. | M/s.M.N.Communications, Nagercoil. | ரூ. 29,600/– (மதிப்பீட்டை விட 1.33% குறைவு ) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட1.33%குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.M.N.Communications, Nagercoil.நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>** : மன்றம் அனுமதி வழஙகலாம்.

(ந.க.எண். இ1/100234/2008 )

**தீர்மானம் எண்:149. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 20**

இந்நகராட்சிக்குட்பட்ட பர்னட்டிவிளையிலிருந்து பாலத்தன்கரை செல்லும் சாலையில் தெற்கு நோக்கி செல்லும் தெருவில் 2" PVC பகிர்மான குழாய் அமைப்பதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.20,000/–க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.1720 நாள் 08.09.2011–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 21.02.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.

| | | |
|---|---|---|
| 1. | திரு.C. சந்திரசேகர், ஒப்பந்தத்தாரர் | ரூ.19,730/– (மதிப்பீட்டை விட 0.02% குறைவு ) |
| 2. | திரு.P. தஙகமணி ஒப்பந்தத்தாரர் | ரூ. 20,454/– (மதிப்பீட்டை விட 3.65% அதிகம் ) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.02% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.C.சந்திரசேகர், ஒப்பந்தத்தாரரின், ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண். இ2/5756/2011

**தீர்மானம் எண்:150. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 21**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.20–ல் செட்டிவிளை பகுதியில் சிமெண்ட் தளம் அமைப்பதற்கு ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.1,75,000/–க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.29 நாள் 24.11.2011–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 16.02.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.

| | | |
|---|---|---|
| 1. | திரு.S. ஜான்றோஸ்,<br>ஒப்பந்தத்தாரர் | ரூ.1,72,872.50<br>(மதிப்பீட்டை விட 0.01% குறைவு ) |
| 2. | திரு.P. தங்கமணி<br>ஒப்பந்தகாரர் | ரூ.1,73,000.50<br>(மதிப்பீட்டை விட 0.06% அதிகம் ) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.01% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.S. ஜான்றோஸ், ஒப்பந்தத்தாரரின், ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண். இ1/6997/2011 )

**தீர்மானம் எண்:151. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 22**

குளச்சல் நகராட்சியில் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2010–11–ன்கீழ் பல்நோக்கு பல்நோக்கு கட்டிடம் கட்டும் பணியினை மதிப்பீட்டு தொகை ரூ.3.00 இலட்சத்தில் மேற்கொள்வதற்கு 09.02.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அதன் விவரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1. | திரு.ஜே.ஜெபஜோஸ்,<br>ஒப்பந்தக்காரர்,<br>ஒற்றுவிளை, திக்குறிச்சி. | 1.75% மதிப்பீட்டை விட கூடுதல்.<br>(ரூ.2,91,387.33 ) |
| 2. | திரு.எஸ்.டேவிட் ராஜ்,<br>ஒப்பந்தக்காரர்,<br>ஆத்திமூடு, மண்டைக்காடு. | 1.23% மதிப்பீட்டை விட கூடுதல்.<br>(ரூ.2,89,894.40 ) |

மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டைவிட கூடுதலாக விலை விகிதத்தை குறைத்து வழங்கக் கேட்டு மேற்படி ஒப்பந்ததாரர்களுக்கு 13.02.2012 அன்று Negotiation கடிதம் அனுப்பப்பட்டது. அதற்கு திரு.ஜே.ஜெபஜோஸ், ஒப்பந்தக்காரரால், கட்டுமான பொருட்களின் விலை விகிதம் மற்றும் ஆட்கள் கூலி ஆகியவை அரசு நிர்ணயித்த விலை விகிதத்தை விட பொதுச் சந்தையில் கூடுதலாக உள்ளதால் விலை விகிதத்தை குறைக்க இயலாது என தெரிவித்தும், திரு.எஸ்.டேவிட்ராஜ், ஒப்பந்தத்தாரரால் மதிப்பீட்டு விலை விகிதத்தில் பணியினை மேற்கொள்ளலாம் என தெரிவித்தும் 17.02.2012 அன்று கடிதங்கள் பெறப்பட்டன. எனவே மதிப்பீட்டு விலைவிகிதத்தில் பணியினை மேற்கொள்ளலாம் என தெரிவித்து இசைவு கடிதம் அளித்துள்ள திரு.எஸ்.டேவிட்ராஜ், ஒப்பந்தத்தாரரின் கருத்தினை ஏற்று, நகராட்சி பொறியியல் துணை விதி பிரிவு 2.7.2–ன்படி மேற்படி பணியினை மேற்கொள்ள, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு:** மதிப்பீட்டு விலைவிகிதத்தில் பணியினை மேற்கொள்ள திரு.எஸ்.டேவிட்ராஜ், ஒப்பந்தத்தாரருக்கு பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். இ1/4117/2010 )

**தீர்மானம் எண்:152. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 23**

இந்நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு TN-74-V-3530–ன் பழுதடைந்த 4 டயர்கள் மற்றும் டியூப்களை புதிதாக மாற்றுவதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ. 24,000/– க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.47, நாள் 30.12.2011–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் பணியின் அவசர அவசியம் கருதி துறை மூலம் நடிவடிக்கை மேற்கொண்டு ரூ.23,200/– செலவினத்தில் ஈப்பின் 4 டயர்கள் மற்றும் டியூப்கள் மாற்றப்பட்டு தொகை வழங்கி விவரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.அ2/5030/2007)

**தீர்மானம் எண்:153. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 24**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2011–12–ன்கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட 7–வது வார்டு குழந்தை ஏசு காலனியில் ரூ.2.50 இலட்சம் மதிப்பீட்டில் பொது வினியோகக் கடை கட்டும் பணிக்கு 21.02.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.

| | | |
|---|---|---|
| 1. | திரு.C. சந்திரசேகர், ஒப்பந்தத்தாரர் | ரூ.2,86,590/– (மதிப்பீட்டை விட 15.81% கூடுதல்) |
| 2. | திரு.V. இருதயதாஸ், ஒப்பந்தத்தாரர் | ரூ. 2,47,219.30 (மதிப்பீட்டை விட 0.01% குறைவு ) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.01% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.V. இருதயதாஸ், ஒப்பந்தத்தாரரின், ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண். இ1/7849/2011)

**தீர்மானம் எண்:154. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 25**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2011–12–ன்கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட 19–வது வார்டு நெசவாளர் தெருவில் ரூ.2.50 இலட்சம் மதிப்பீட்டில் பொது வினியோகக் கடை கட்டும் பணிக்கு 21.02.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.

| | | |
|---|---|---|
| 1. | திரு.S. ஜான்றோஸ், ஒப்பந்தத்தாரர். | ரூ.2,47,443.75 (மதிப்பீட்டை விட 0.11% குறைவு) |
| 2. | திரு.C. செல்லநாடார், ஒப்பந்தத்தாரர் | ரூ. 2,66,459.50 (மதிப்பீட்டை விட 7.57% அதிகம் ) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.11% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.S. ஜான்றோஸ், என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண். இ1/7849/2011)

**தீர்மானம் எண்:155. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 26**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வடிகால் ஓடை அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கை தயார் செய்வதற்கு மன்ற தீர்மான நகலானது TNUIFSL, சென்னை அலுவலக கடிதம் KfWGF 11/TNUIFSL/ New Projects – SWD – 30 ULBS/2012 நாள் 09.01.2012 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் கடிதம் ந.க.எண்.6073/2011/B1 நாள் 01/2012 ஆகியவற்றில் கோரப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சிக்குட்பட்ட சிஙகன்காவு சாஸ்தா கோவில் முதல் களிமார் பாலம் வரை அமைந்துள்ள வடிகால் ஓடை சேறும், சகதியுமாக உள்ளதால், வடிகால் ஓடையில் செல்லும் கழிவு நீரானது தைநாத்தன்பரை வயல்வெளியில் சென்று பயிரிட முடியாமல் தேஙகி நிற்கிறது. இதனால் விளைநிலஙகள் பாழடைந்து நிலத்தடி நீர் மாசுப்பட்டு வருகிறது. இதை தவிர்க்கும் பொருட்டு மேற்படி இடத்தில் ரூ.180.00 இலட்சம் மதிப்பீட்டில் காஙகிரீட்டால் ஓடை அமைத்து சாலை அமைப்பதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>** : மன்றம் அனுமதி வழஙகலாம். (ந.க.எண். இ1/387/2012)

**தீர்மானம் எண்:156. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 27**

இந்நகராட்சிக்கு சொந்தமான புல எண். P3-29 கொண்ட இடத்தில் இயஙகி வரும் டாக்டர் அம்பேத்கார் தினசரிச்சந்தையின் முகப்பு மற்றும் உட்பகுதியில் உள்ள தரைப்பாக கடைகளின் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் தற்போது குத்தகை எடுப்பவரின் கைவசம் உள்ளது. எனவே மேற்படி இடத்தில் நகராட்சி மூலம் தரைப்பாக கடைகளோ (அ) முன்ஏல நடவடிக்கையின் கீழ் கடைகளோ கட்டிக் கொடுக்கும் நிலையில் மேற்படி இடத்தினை அபிவிருத்தி செய்ய இயலும் என்பதுடன் நகராட்சிக்கு வருவாயும் பெருமளவு ஈட்ட இயலும். எனவே மேற்படி இடத்தில் தெற்கு வடக்காக உள்ள திசையில் 100 ச.அடி அளவு கொண்ட 51 கடைகள் அமைக்கவும், மேற்படி கடைகளை உரிய வைப்புத் தொகை (ம) கூடுதல் வைப்புத் தொகை, மின்கட்டண வைப்புத் தொகை நிர்ணயம் செய்து பொது ஏலம் விட நடவடிக்கை எடுக்கவும், தனி மின் இணைப்பு நகராட்சி ஆணையர் பெயரில் எடுத்துக்கொள்ள தடையில்லா சான்று வழஙகவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>** : 1) தரைப்பாக கடைகளாக ஒப்படைக்கும் நிலையின், வைப்புத் தொகையாக ரூ.1.00 லட்சமும், கூடுதல் வைப்பு தொகையாக ஒன்பது மாத வாடகை நிர்ணயம் செய்யுவும், கடைகள் நகராட்சி குறித்து தரும் இடத்தில் ஆஸ்பிட்டாஸ் கூரை வசதியுடன் தரை வாடகைதாரர்கள் தஙகள் சொந்த செலவில் ஒரே சீராக அமைத்து கொள்ளவும் மன்றம் அனுமதி வழஙகலாம்.

(2) முன் ஏல நடவடிக்கையாக ஒப்படைக்கும் நிலையில் வைப்பு தொகையாக ரூ.1.00 லட்சமும் கட்டி முடிக்கப்பட்டு ஒப்படைக்கும் நிலையில் கூடுதல் வைப்பு தொகை ரூ. 1.00 லட்சம் நிர்ணயம் செய்யவும் மன்றம் அனுமதி வழஙகலாம்.

(3) மின்கட்டண வைப்பு தொகையாக ரூ.10,000/– நிர்ணயம் செய்யவும் மன்றம் அனுமதி வழஙகலாம்.

(4) ஏலம்/ஒப்பந்தப்புள்ளிக்கு தனித்தனியே ஏலவைப்பு தொகைகள் பெறவும் மன்றம் அனுமதி வழஙகலாம்.

(5) ஏல நடவடிக்கைகளை மாவட்ட ஒப்பந்தப்புள்ளி செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் வழி விளம்பரம் செய்யவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதி வழஙகலாம்.

(6) மேற்படி ஏல நடவடிக்கையில் எவரும் நீதிமன்றத்தில் வழக்கு தொடராது இருக்க கேவியட் மனு தாக்கல் செய்யவும், அதற்காகும் செலவினத்திற்கும் மன்றம் அனுமதி வழஙகலாம்,

(7) அரசாணை நிலை எண். 92 நாள் 03.07.2007 படியும் அனுபவித்துக் கொள்ள அனுமதிக்கலாம்.

(ந.க.எண். அ1/11062/2012)

**தீர்மானம் எண்:157. தீர்மானம் ஒத்திவைக்கப்பட்டது.**

**பொருள் எண். 28**

குளச்சல் நகராட்சியின் 3–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.என்.முகம்மது தாசிம் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.

குளச்சல் நகராட்சி டாக்டர் அம்பேத்கார் தினசரிச்சந்தையில் பொதுமக்களுக்கு பயன்படுத்துவதற்காக நகராட்சியால் அமைக்கப்பட்டிருந்த கழிப்பிடத்தை நகராட்சி நிதியிலிருந்து ரூ.60,000/– செலவழித்து இடித்து மாற்றிய பின் ஏற்பட்ட காலியிடத்தை நகராட்சி அனுமதியின்றி ஆக்கிரமித்து மக்களுக்கு இடையூறாக கொட்டகை அமைத்து நகராட்சி நிலத்தை அபகரித்து வைத்திருந்த தனிநபரிடமிருந்து நகராட்சி நிலத்தை மீட்டு பொதுமக்கள் நலனுக்காகவும், நகராட்சி வருமானத்தை பெருக்கவும் பயன்படுத்த நகர்மன்ற உறுப்பினர்களின் ஒருமித்த ஆதரவுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் பலமுறை நோட்டீஸ் அனுப்பியும், கால அவகாசம் வழங்கியும், ஆக்கிரமிப்புக்களை மாற்றித் தராமல் இழுத்தடித்த நபரிடமிருந்து அரசு வழக்கறிஞரின் ஒப்புதல் பெற்று சட்டப்படி நடவடிக்கை எடுத்து ஆக்கிரமிப்புக்களை அகற்றி நகராட்சி நிலத்தை மீட்ட குளச்சல் நகராட்சி நிர்வாகத்திற்கு நன்றியை தெரிவிக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண்:158. ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**பொருள் எண். 29**

குளச்சல் நகராட்சியின் 20–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.எம்.ஏ.ரஹீம் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.

நகர்மன்ற உறுப்பினர்களுக்கு தற்போது வழஙகப்பட்டு வரும் ரூ.600/– அமர்வுப்படியை அண்டை மாநிலத்தில் வழஙகி வருவது போல் ரூ.4200+300=4500/– என உயர்வு செய்திட தமிழக அரசை வலியுறுத்த மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண்:159. ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**பொருள் எண். 30**

குளச்சல் நகராட்சியின் 23–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.T.G. லதா அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட 23–வது வார்டு புல்லன்விளை சந்திப்பு ஆறுமுகம், ஓட்டுநர் அவர்கள் வீட்டு பக்கம் உள்ள மின்கம்பம் எண். FI/52 –ல் மின்விளக்கு இல்லாத காரணத்தால் இரவு நேரஙகளில் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளது. ஆகவே மேற்படி இடத்திலுள்ள மின்கம்பத்தில் மின் விளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண்:160. ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்